சங்கராபுரம் தொகுதியில் கல்வராயன் மலையில் ஆரம்ப சுகாதார நிலையம்

641—(*வினா எண் 3995)—திரு. சோ. கலிதீர்த்தான்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதியில் கல்வராயன் மலையில் ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது திட்டம் துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) இந்தத் திட்டம் 1987–88 ஆம் ஆண்டில் செயல் படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திரு. எஸ். சிவராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1987–88 ஆம் ஆண்டுத் திட்டத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்கப்படும் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் தற்சமயம் வெள்ளிமலை போன்ற பகுதியிலே அரசாங்க மருந்தகம் என்று சொல்லி ஆரம்பித்து டாக்டர்கள் போடப்பட்டிருக்கிறார்கள். ஆனால் டாக்டர்கள் அங்கு செல்வதேயில்லை. அந்த பகுதிகளிலே அதிகமான மருத்துவ மனைகள் கிடையாது. எனவே, உடனடியாக அந்த மலைவாழ் மக்களுக்காக மருத்துவர்களை நியமித்து, அங்கேயே தங்கி சிகிச்சை செய்வதற்கு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-50)

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: பேரவைத் தலைவர் அவர்களே, பழங்குடி மக்களுடைய நலத்தைக் கருதி அங்கே பணிபுரிகின்ற மருத்துவர்களுக்கு தங்குவதற்காக குவார்ட்டர்ஸ் கட்டிக்கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி அதில் அவர்கள் தங்கவில்லை என்று புகார் வருகின்றபோது, அவர்கள் அங்கே தங்குவதற்கும், அவர்கள் அங்கேயிருந்து பணிபுரிவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

சேலம் மாவட்டத்தில் மத்திய சிறப்பு நிதி உதவி திட்டம்.

642. (*வினா எண். 4616)—திரு. சி. சிவப்பிரகாசம்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) 1985–86 ஆம் ஆண்டுக்கு ஆதி திராவிட நலத்துறை மூலம் சேலம் மாவட்டத்தில் மத்திய சிறப்பு நிதி உதவி திட்டத்தின்கீழ் புதுச்சத்திரம் ஒன்றியத்தினை எடுத்துக்கொள்ள அரசு பரிசீலனை செய்யுமா?